தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ச. கார்த்திகேயன் Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-5-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மே மற்றும் ஜுன் மாதங்களில் ஏறுமுகத்தில் தக்காளி விலை

உலக அளவில் அதிகமாக பயிரிடப்படும் காய்கறிகளில் தக்காளி முதன்மை வகிக்கிறது. தக்காளியில் அதிக அளவில் வைட்டமின்கள், தாதுக்கள், நார்சத்துக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன.

இந்தியாவில் தக்காளிப் பயிரானது குளிர்கால மற்றும் கோடைக்காலப் பயிராக பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் குறிப்பாக ஆடிப்பட்டம், கார்த்திகைப்பட்டம் மற்றும் தைப்பட்டங்களில் பரவலாக பயிரிடப்படுகிறது. தை மற்றும் மாசி அறுவடை சமயம் ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களின் அறுவடையும் நடக்கிறது. அதனால் மைசூர் மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் மொத்த சந்தைகளில் வரத்து அதிகரித்து பண்ணை விலை குறைகிறது.

தற்போது கோயம்புத்தூர் சந்தைக்கு கொள்முதல் இடங்களான கிணத்துக்கடவு, நாச்சிப்பாளையம், தொண்டாமுத்தூர் முதலியவற்றிலிருந்து குறைவான வரத்து காணப்படுகிறது. தற்போது கர்நாடகா மாநிலத்திலிருந்து (மைசூர் மற்றும் பெங்களூர் மாவட்டம்) வரத்து உள்ளது. வெளி மாநில வரத்து மற்றும் உள்ளூரில் குறைவான வரத்து காரணமாக முந்தைய மாதத்தின் விலையை விட (கிலோ ரூபாய் 2-3) தற்போது விலை உயர்ந்து கிலோ 6 -10 ரூபாய் என விற்கப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் ஒட்டன்சத்திரம் சுற்றுப்புற வட்டாரங்களில் அறுவடை முடிவுறும் சமயத்தில் தற்போது விலை கிலோவிற்கு ரூபாய் 6-8 என விற்கப்படுகிறது. தலைவாசல் மொத்த சந்தைக்கு ஆத்தூர், கடலூர், பண்ருட்டி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்தும் மிதமான வரத்து உள்ளது. தற்போது தக்காளி கிலோ ரூபாய் 6-8 என்ற பண்ணை விலையில் விற்பனை

செய்யப்படுகிறது. ஒசூர் சந்தையிலும் பெங்களுர் மற்றும் தர்மபுரி மாவட்ட பகுதிகளில் இருந்து வரத்து காணப்படுகிறது. தற்போது தக்காளி கிலோ ரூபாய் 6 முதல் 8 என்ற பண்ணை விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

எதிர்வரும் காலத்தில் தக்காளியின் விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விபரங்களை ஆராய்ந்தது.

வறட்சி மற்றும் மழையின்மை காரணமாக தக்காளி சாகுபடி பரப்பு கோயம்புத்தூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் முந்தைய சாகுபடிப் பரப்பை விட குறைந்து காணப்படுகிறது. கடந்த வருடங்களில் நிலவிய விலை ஆய்வு மற்றும் வர்த்தக மூலங்கள் படி ஏப்ரல் மாதத்தில் விலை சற்று உயர்ந்து கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 12 வரை கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், தலைவாசல் மற்றும் ஒசூர் சந்தைகளில் இருக்கும். மே மாதத்திலிருந்து மேலும் விலை உயர வாய்ப்பு உள்ளது. கோயம்புத்தூர் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 25 முதல் 30 வரை ஜுன் மாத தொடக்கத்தில் இருக்கும். ஒட்டன்சத்திரம் சந்தையில் விலை உயர்ந்து கிலோவிற்கு ரூபாய் 22 வரை இருக்கும். ஒசூர் மற்றும் தலைவாசல் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 20 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி: 0422-6611374 / 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்